செ.வெ.எண்:07 நாள்:06-.08-2018

**கரூர் மாவட்டம்**

**பொதுமக்களின் மனுக்களுக்கு காலதாமதம் இல்லாமல் உடனுக்குடன் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேச்சு**

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.08.2018) நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 302 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கடவூர் வட்டம், கீழ்பகுதி கிராமத்தைச் சார்ந்த இறந்த பாலமுருகன் என்பவரது வாரிசுதாரரும், தாயாருமான திருமதி லெட்சுமி என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000க்கான காசோலையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இன்று (06.08.2018) அளித்த மனுக்கள் மீத உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டையும் வழங்கினார். பொய்யாமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.பூபதி, கனவு ஆசிரியர் விருது பெற்றமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி செல்வசுரபி, மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.அனந்தநாராயணன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு.த.குமரேசன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திருமதி ஜான்சி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**